**சுருக்கம்**

கல்லூரிக் கல்வி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – 2020-21-ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்ட கரூர் மாவட்டம், தரகம்பட்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் 2022-23-ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்ட திருப்பூர் மாவட்டம் – தாராபுரம், ஈரோடு மாவட்டம் – தாளவாடி, விருதுநகர் மாவட்டம் – திருச்சுழி, திண்டுக்கல் மாவட்டம்– ஒட்டன்சத்திரம் ஆகிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு நிரந்தர கட்டடங்கள் கட்டுதல் – ரூ.62,24,00,000/-க்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**உயர்கல்வித்(டி1) துறை**

அரசாணை(நிலை) எண்.152

நாள்: 10.08.2022
சுபகிருது வருடம், ஆடி – 25
திருவள்ளுவர் ஆண்டு, 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.133, உயர்கல்வி (ஜி1)த் துறை, நாள்.07.10.2020
2. அரசாணை (நிலை) எண்.228, உயர்கல்வி (ஜி1)த் துறை, நாள்.19.11.2021
3. திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் எண். ந.க.23773/2021/ஆ2, நாள் 13.12.2021.
4. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் எண். ந.க.31422/2021/உ2, நாள் 08.02.2022.
5. விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக கடிதம் எண். ந.கஆ4/42673/2021, நாள் 14.03.2022.
6. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் மண்டலத்துணை வட்டாட்சியரின் செயல்முறைகள் எண். டி.ஆர் 2022 /0103 /13/ 195693 TR, நாள் 17.03.2022.
7. கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் எண். ந.கஆ1/10968/2021, நாள் 21.03.2022.
8. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க. எண்.18616/ஜெ3/2021, நாள் 19.05.2022.

**ஆணை:**

மேலே முதல் மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில், மற்றவைக்கிடையே 2020-21-ஆம் கல்வியாண்டு முதல் கரூர் மாவட்டம்,

தரகம்பட்டியில் இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் மற்றும் 2022-23-ஆம் கல்வியாண்டு முதல் திருப்பூர் மாவட்டம், தாராபுரம், ஈரோடு மாவட்டம், தாளவாடி, விருதுநகர் மாவட்டம், திருச்சுழி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் ஐந்து பாடப் பிரிவுகளுடன் துவங்குவதற்கு அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 11.04.2022 அன்று நடைபெற்ற உயர்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது பின்வரும் 16 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ரூ.199.36 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

<u>2016-17 முதல் 2020-21 வரை உள்ள ஆண்டுகளில் தொடங்கப்பட்ட கல்லூரிகள்</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | குடவாசல் | – | திருவாரூர் மாவட்டம் (2017-18) |
| 2 | காட்டுமன்னார் கோவில் | – | கடலூர் மாவட்டம் (2017-18) |
| 3 | இராமேஸ்வரம் | – | இராமநாதபுரம் மாவட்டம் (2019-20) |
| 4 | திருவில்லிபுத்தூர் | – | விருதுநகர் மாவட்டம் (2020-21) |
| 5 | ஜெயங்கொண்டம் | – | அரியலூர் மாவட்டம் (2020-21) |
| 6 | தரகம்பட்டி | – | கரூர் மாவட்டம் (2020-21) |

<u>2022-23 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ள கல்லூரிகள்</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | திருச்சுழி | – | விருதுநகர் மாவட்டம் |
| 2 | திருக்கோவிலூர் | – | கள்ளக்குறிச்சி மாவட்டம் |
| 3 | தாளவாடி | – | ஈரோடு மாவட்டம் |
| 4 | ஒட்டன்சத்திரம் | – | திண்டுக்கல் மாவட்டம் |
| 5 | மானூர் | – | திருநெல்வேலி மாவட்டம் |
| 6 | தாராபுரம் | – | திருப்பூர் மாவட்டம் |
| 7 | ஏரியூர் | – | தருமபுரி மாவட்டம் |
| 8 | ஆலங்குடி | – | புதுக்கோட்டை மாவட்டம் |
| 9 | கூத்தாநல்லூர் | – | திருவாரூர் மாவட்டம் |
| 10 | சேர்க்காடு | – | வேலூர் மாவட்டம் |

3. மேற்படி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள 16 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் திருப்பூர் மாவட்டம்- தாராபுரம், ஈரோடு மாவட்டம் - தாளவாடி, விருதுநகர் மாவட்டம்- திருச்சுழி, திண்டுக்கல் மாவட்டம்- ஒட்டன்சத்திரம் மற்றும் கரூர் மாவட்டம்- தரகம்பட்டி ஆகிய ஐந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு நிரந்தர கட்டடங்கள் கட்டுவது தொடர்பாக

...3

சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் / வருவாய் துறையால் பின்வரும் அரசு/தானம் நிலங்கள் தெரிவுச்செய்யப்பட்டு அந்நிலங்களுக்கு அனுமதி, பட்டாமாறுதல், முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளன :-

I). **அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாராபுரம் , திருப்பூர் மாவட்டம்,**

மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளில் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், நாச்சியம்பாளையம் கிராமம் புல எண்.198/1-ல் தொழில் நுட்ப பயிற்சி கூடம், குடிநீர் கிணறு என தாக்கலாகியுள்ள நிலத்தில் உள்ள7.73.42 ஹெக்டேர் மொத்த பரப்பில் 2.02.35 ஹெக்டேர் பரப்பு உள்ள நிலத்தினை மட்டும் மேற்படி அரசு கல்லூரி அமைக்க உயர்கல்வித் துறைக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் முன் நுழைவு அனுமதி வழங்கி உத்தரவிடபட்டுள்ளது.

II). **அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாளவாடி , ஈரோடு மாவட்டம்,**

மேலே நான்காவதாக படிக்கப்பட்ட ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளில் தாளவாடி வட்டம், தாளவாடி உள்வட்டம், தாளவாடி கிராமம் புல எண் 73-ல் பு.ஹெக்டேர்.1.50.50 அனாதீன புறம்போக்கு மற்றும் புல எண்.100-ல் பு.ஹெக்டேர்1.68.50 விஸ்தீரணமுள்ள சர்க்கார் தீர்வை ஏற்படாத தரிசு பாறை புறம்போக்கு ஆக மொத்தம் பரப்பளவு பு.ஹெக்டேர் 3.19.00 (பு.ஏக்கர் 7.88 சென்ட்) நிலம் முழுவதையும் மேற்படி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கம் பொருட்டு உயர் கல்வித் துறைக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் முன் நுழைவு அனுமதி வழங்கி உத்தரவிடபட்டுள்ளது.

III). **அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சுழி, விருதுநகர் மாவட்டம்,**

மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக கடிதத்தில் மேற்படி கல்லூரி கட்டுவதற்கு திருச்சுழி வட்டம், மேலேந்தல் கிராமம் புல எண்கள் 4/1ல் பரப்பு 1.47.00 ஹெக்டேர் மற்றும் 4/4ல் பரப்பு 0.26.50 ஹெக்டேர் ஆக மொத்தம் 1.73.50 ஹெக்டேர் (4.28 ஏக்கர்) நிலங்களை, மேற்படி நிலங்களின் உரிமையாளரான திரு.T.R.S. கார்த்திகேயன் என்பவரிடமிருந்து திருச்சுழி சார்பதிவக அலுவலக ஆவண எண்.167/2022, நாள்,25.01.2022-ன்படி தானமாக பெறப்பட்டுள்ளது என்றும், இவ்வாறு பெறப்பட்ட மேற்படி நிலங்கள் பட்டா எண்.351-ல் தமிழ்நாடு அரசு மேதகு ஆளுநர்.... அரசு கலைக் கல்லூரி என்ற பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

...4

IV). **அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்,**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டுவதற்கு ஒட்டன்சத்திரம் வட்டம் கள்ளிமந்தயம் கிராமப் புல எண் 1005-ல் 2.56.00 ஹெக்டேர், புல எண் 1006/2ல் 0.68.00 ஹெக்டேர் மற்றும் புல எண் 1495-ல் 0.25.00 ஹெக்டேர் ஆக மொத்தம் 3.49.00 ஹெக்டேர் நிலங்களை மேற்படி நிலங்களின் உரிமையாளரான திரு. கருப்புச்சாமி மகன் திரு.சத்திவேல் மற்றும் திரு.க.பெருமாள் மகன் திரு.P.ரவிச்சந்திரன், திரு.க.பெருமாள் மகளும் திரு.சரவணன் மனைவியுமான திருமதி. S.மகாலட்சுமி, திரு.P.ரவிச்சந்திரன் மனைவி திருமதி.R.செல்வி, திரு.பெ.ராஜேந்திரன் மனைவி திருமதி.R.தீபா, திரு. சின்னான் மனைவி திருமதி.C.நாச்சம்மாள், திரு.நாச்சிமுத்து மனைவி திருமதி.N.நாச்சம்மாள் அகியோரிடமிருந்து முறையே கள்ளிமந்தயம் சார்பதிவக அலுவலக ஆவண எண்கள்.468/2022, நாள், 17.03.2022 மற்றும் 526/2022, நாள், 15.03.2022-ன்படி தானமாக பெறப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட மேற்படி நிலத்திற்கு மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் மண்டலத் துணை வட்டாட்சியரின் செயல்முறைகளில் பட்டா மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டு அதனடிப்படையில் பட்டா எண்.5082-ல் தமிழ்நாடு அரசு மேதகு ஆளுநர் அவர்களுக்காக.... கல்லூரி கல்வி இயக்குநர் என்ற பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது.

V). **அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தரகம்பட்டி, கரூர் மாவட்டம்**

மேலே ஏழாவதாக படிக்கப்பட்ட கரூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதத்தில் மேற்படி கல்லூரி அமைக்க தரகம்பட்டி சார்பதிவக ஆவண எண்.3436/2021, நாள்.26.10.2021-ன்படி திரு.ராமசாமி மகன் திரு.பெருமாள்சாமி (1), திரு.ராமசாமி மகன் திரு.சௌந்திரராஜன் (2), திரு. சேகர் மனைவி திருமதி. ஈஸ்வரி (3), திரு.பாலசுப்பிரமணியன் மனைவி திருமதி.ஜெயசித்ரா(4) மற்றும் திரு. பார்த்தசாரதி மனைவி திருமதி. ரேணுகாதேவி (5) ஆகியோரால் கடவூர் வட்டம், கீழ்ப்பகுதி கிராமம் புல எண்கள்.125/7D-ல் மொத்த விஸ்தீரணம் ஹெக்.0.33.50 ஏர்ஸ், 125/9B-ல் விஸ்தீரணம் ஹெக்.0.27.00 ஏர்ஸ், 126/4B-ல் விஸ்தீரணம் ஹெக்.0.17.50 ஏர்ஸ், 128/1B-ல் விஸ்தீரணம் ஹெக்.0.43.00 ஏர்ஸ், 128/2-ல் விஸ்தீரணம் ஹெக்.0.17.50 ஏர்ஸ், 128/3-ல் விஸ்தீரணம் ஹெக்.0.17.50 ஏர்ஸ், 128/4B-ல் விஸ்தீரணம் ஹெக்.0.11.50 ஏர்ஸ், 128/5B-ல் விஸ்தீரணம் ஹெக்.0.11.00 ஏர்ஸ், 128/6-ல் விஸ்தீரணம் ஹெக்.0.14.00 ஏர்ஸ், 129/1A-ல் விஸ்தீரணம் ஹெக்.0.05.50 ஏர்ஸ் மற்றும் 129/2A-ல் விஸ்தீரணம் ஹெக்.0.04.50 ஏர்ஸ், ஆக மொத்தம் ஹெக்.02.02.50 ஏர்ஸ் விஸ்தீரணம் கொண்ட நிலங்கள் மேதகு தமிழ்நாடு

...5

அரசு ஆளுநர் அவர்களுக்கு நன்கொடையாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, "ரயத்து புஞ்சை" என வகைபாடுடைய மேற்படி நிலத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கலாம் என தெரிவித்துள்ளார்.

4. மேலே, பத்தி-2ல் உள்ள அறிவிப்பிற்கிணங்க, கல்லூரிக் கல்வி இயக்குநர் மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் மேற்காணும் ஐந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு மேற்படி தேர்வு செய்யப்பட்டுள்ள நிலங்களில் நிரந்தரக் கட்டடம் கட்டுவது தொடர்பாக பொதுப்பணித்துறை, தொழில்நுட்பக் கல்வி வட்ட தலைமைப் பொறியாளரிடமிருந்து கீழ்கண்டவாறு திட்டமதிப்பீடுகள் பெறப்பட்டுள்ளது என தெரிவித்து அத்திட்டமதிப்பீட்டுகளின் படி ஐந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு புதிதாக கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.62,30,00,000/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு 2022-23-ஆம் நிதியாண்டிலேயே வழங்கி ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வரிசை எண். | கல்லூரியின் பெயர் | திட்டமதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாராபுரம், திருப்பூர் மாவட்டம். | 12.46 |
| 2. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாளவாடி , ஈரோடு மாவட்டம் | 12.46 |
| 3. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சுழி, விருதுநகர் மாவட்டம் | 12.46 |
| 4. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம். | 12.46 |
| 5. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி , தரகம்பட்டி, கரூர் மாவட்டம் | 12.46 |
| | **மொத்தம்** | 62.30 |

5. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்த அரசு, 2020-21-ஆம் கல்வியாண்டில் கரூர் மாவட்டம், தரகம்பட்டி என்ற இடத்தில் தொடங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு (இருபாலர்) மேலே பத்தி 3(V)-ல் கரூர் மாவட்ட ஆட்சியரால் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலங்களில் நிரந்தர கட்டடம் கட்டுவதற்கு ரூ.12,40,00,000/-யும் மற்றும் 2022-23-ஆம் கல்வியாண்டில் திருப்பூர் மாவட்டம் - தாராபுரம், ஈரோடு மாவட்டம் - தாளவாடி, விருதுநகர் மாவட்டம் - திருச்சுழி, திண்டுக்கல் மாவட்டம் - ஒட்டன்சத்திரம். ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு (இருபாலர்) மேலே பத்தி3 (I), (II), (III) & (IV) -ல் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் / வருவாய் துறையால் பட்டாமாறுதல் மற்றும் முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலங்களில் நிரந்தர கட்டடங்கள்

கட்டுவதற்கு ஒரு கல்லூரிக்கு தலா ரூ.12,46,00,000/- வீதம் நான்கு கல்லூரிகளுக்கும் ரூ.49,84,00,000/-யும் ஆகமொத்தம் மேற்படி ஐந்து கல்லூரிகளுக்கு ரூ.62,24,00,000/-க்கு (ரூபாய் அறுபத்து இரண்டு கோடியே இருபத்து நான்கு இலட்சம் மட்டும்) நிருவாக அனுமதியும் மற்றும் அத்தொகையை 2022-23-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டமதிப்பீட்டிலிருந்து ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4202 - கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு - 01 பொதுக்கல்வி - 203 பல்கலைக் கழக கல்வியும், உயர்கல்வியும் - மாநிலச் செலவினங்கள் -JB கட்டடங்கள் - தொழில்நுட்பக்கல்வி பிரிவால் நிருவகிக்கப்படுபவை - 416 பெரும்பணிகள்-01 பெரும்பணிகள்.

(IFHRMS த.தொ.கு. 4202 - 01- 203 - JB - 41601)"

7. இவ்வாணை, அரசாணை (நிலை) எண். 519, நிதித் (சம்பளங்கள்) துறை, நாள்.29.9.1997-இன்படி, நிதித் துறையின் ஒப்புதலைப் பெற வேண்டியதில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-15.
தலைமை பொறியாளர், பொதுப்பணித்துறை, தொழில்நுட்பக் கல்வி வட்டம், சென்னை -25.
சம்பந்தப்பட்ட கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக).
சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்கள் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக).
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.
சம்பந்தப்பட்ட கருவூல கணக்கு அலுவலர்கள்.
உள்ளுறை கணக்கு அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை-9.

நகல்

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், உயர்கல்வித்துறை, சென்னை-9.
நிதித்(கல்வி-I)துறை, சென்னை -9.
இ.கோ/உ.திரி.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

10/8/22
பிரிவு அலுவலர்
10/8/22